BACK

**FIRST INFORMATION REPORT** **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | District: | **PULIANTHOPE** | P.S. | **KODUNGAIYUR** | Year | **2022** | FIR No. | **143** | Date: | **20-01-2022** |
| | மாவட்டம் | | காவல் நிலையம் | | ஆண்டு | | மு. த.அ.எண் | | நாள் | |

2. Act(s) சட்டம் — Sections பிரிவுகள்

| Act(s) | Sections |
|---|---|
| **INDIAN PENAL CODE, 1860** | **294(b)** |
| **INDIAN PENAL CODE, 1860** | **323** |
| **INDIAN PENAL CODE, 1860** | **324** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3. (a) | Occurrence of Offence Day: | **THURSDAY** | Date From: | **13-01-2022** | Date To: | **-** | |
| | குற்ற நிகழ்வு நாள் | | நாள் முதல் | | நாள் வரை | | |
| | Time Period: | **On** | Time From: | **23:30 Hrs** | Time To: | **-** | |
| | நேர அளவு | | நேரம் முதல் | | நேரம் வரை | | |
| (b) | Information received at PS. Date: | **20-01-2022** | Time: | **19:00 Hrs** | (c) General Diary Reference: | | Entry No(s) |
| | காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | | நேரம் | | பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | Type of Information: | **WRITTEN** | Time : | **-** | |
| | தகவலின் வகை | | நேரம் | | |
| 5. | Place of Occurrence: (a) Direction and Distance from PS: | | | Beat Number: | **SECTOR 3** |
| | குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் | | | முறைக் காவல் எண் | |
| (b) | Address: | **P6 KODUNGAIYUR P.S** | | | |
| | முகவரி | | | | |
| (c) | In case, outside limit of this Police Station,then the Name of P.S: | | **-** | District: | **-** |
| | இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில், அந்த கா.நி பெயர் | | | மாவட்டம் | |
| 6. | Complainant/Informant (a) Name: | **ABDUL RAHIM** | (c) Date/Year of Birth: **2000** | (d) Nationality: | **INDIA** |
| | குற்றமுறையீட்டாளர் / தகவல் தந்தவர் பெயர் | | நாள் / பிறந்த ஆண்டு | நாட்டினம் | |
| | (b).Father's/Husband's Name: | **ABDUL KARIM** | | | |
| | தந்தை / கணவர் பெயர் | | | | |
| | (e).Passport No. | | Date of Issue: | Place of Issue: | |
| | வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் | | வழங்கப்பட்ட நாள் | வழங்கப்பட்ட இடம் | |
| | (f). Occupation: | **-** | | | |
| | தொழில் | | | | |
| | (g). Address: | **NO:319, 8TH STREET,, PUDHU NAGAR, CHENNAI-39** | | | |
| | முகவரி | | | | |
| 7. | Details of Known/Suspected/Unknown accused with full particulars | | | | |
| | தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள். | | | | |

BACK

நசீமா,உத்திரகுமார்,பூமிநாதன்,ஹேமநாதன்,சத்தியராஜ்,ராமலிங்கம்,அந்தோனி, மற்றும் 2 நபர்கள்

8. Reasons for delay in reporting by the complainant/Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்.

9. Particulars of the properties stolen/Involved:

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம்.

BACK

10. Total value of properties stolen/Involved:

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report/ Un-natural death Case No. If any:

பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம்

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது இன்று 20.01.2022 ஆம் தேதி ப்பி6 கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது திரு அப்துல் ரஹீம் ஆ/வ 22 த/பெ அப்துல் கரீம் , எண் 319, 8 வது தெரு. புது நகர் , சென்னை 39 என்பவர் கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு அய்யா நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகின்றேன் நான் " School of Excellence “ கல்லூரியில் 5 ஆம் ஆண்டு பயின்று வருகின்றேன். நான் கடந்த 13/01/2022 அன்று எனது customer க்கு medicines door delivery செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன் சுமார் 11.30 P.M மணியளவில் சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்த போது M.R Junction ல் இருந்த காவல் துறையினர் என்னை வழிமறித்து Mask அணியாததற்கு ரூ 500 fine கட்ட வேண்டுமென வலியுறுத்தினர் . நான் Mask அணிந்திருக்கும் பொழுது ஏன் fine கட்ட வேண்டும் என கேட்டேன் மேலும் நான் பணிபுரியும் SHREE KUMARAN PAHARMACY “ அடையாள அட்டையையும் காண்பித்து விளக்கினேன் அப்போது " உத்திர குமார் " என்ற காவலர் என்னை அடித்து இழுத்து காவல் வாகனத்தில் ஏற்றி காவல் நிலையம் இழுத்து சென்றனர் அங்கு " ஹேமநாதன் " என்ற காவலர் உன் மீது பெட்டி கேஸ் போட்டுள்ளேன் கைரேகை வை என்று மிரட்டி கைரேகை வாங்கிக் கொண்டார். பின்பு சைக்கிள் கேட்டதற்கும் என் மீது போடப்பட்ட வழக்குக்கு விளக்கம் கேட்டதற்க்கும் ஆத்திரமடைந்த உத்திர குமார் என்னை ஓத்தா தேவிடியா பையா. போலீஸ் கிட்டேயே திமிரா பேசிறியா என்று கொச்சையாக திட்டி கழுத்திலும், முகத்திலும். தலையிலும் தாருமாறாக தாக்கிக் கொண்டே இருந்தார் பின்பு , சிவப்பு நிற நீளமான பைப் எடுத்து கண்மூடித்தனமாக தாக்கினார் அப்போது அருகில் இருந்த ஆய்வாளர் ( AWPS-18) “ நசீமா என்பவர் என்னைப் பார்த்து " ஏன்டா நீங்கலாம் Law பெரிய மயிராடா உங்களுக்கெல்லாம் சும்மா விடக்கூடாது " என்று கூறி கொலை வெறித்தனமாக தாக்கத் தொடங்கினார் பிறகு காவலர் ஹேமநாதன் என்னை தாக்கி ஆடைகளை கழுட்டச் சொல்லி Under wear - ன் உட்கார வைத்தார் சிறிது நேரத்தில் வந்த நசிமா Boots காவல் ஓங்கி மித்தார் பின்பு CCTV கேமராவை திருப்பி

வைத்து விட்டு அதே சிவப்பு பைப்பால் நசீமாவும் " உத்திர குமாரும் " மாறி மாறி கொலை வெறியோடு தாக்கினர் பின்பு உத்திர குமார் " ஓத்தா போலீஸ் Treatment ல போலீஸ்னா யாருன்னு தெரியும் பாருடான்னு " சொல்லிவிட்டு " சத்தியாராஜ் " என்ற காவலரும் , உத்திர குமாரும் தாக்கத் தொடங்கினர். சத்தியராஜ் என் கால் முட்டிகளின் மீது ஏறி நிற்க உத்திர குமார் அடிப்பாதத்தில் பைப்பால் கடுமையாக தாக்கினார் பின்பு தூக்கி நிறுத்தி குதிக்க வைத்து நடக்க வைத்து Normal ஆன பிறகு மீண்டும் தாக்கத் தொடங்கினர் பின்பு அங்கிருந்த பெயர் தெரியாத பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய கட்டம் போட்ட Shirt அணிந்திருந்த காவலர் என் கண்ணத்தில் தாருமாறாக தாக்கியதோடு , தலையை பிடித்து பீரோவில் வேகமாக பல முறை முட்டினார் அப்போது வந்த பெயர் தெரியாத ஆனால் அடையாளம் காட்டக்கூடிய ஏட்டு வந்து என் கழுத்தில் இரண்டு முறை கொடூரமாக தாக்கினார் காவலர்களின் இந்த கொடும் சித்ரவதையால் வலி தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ளுமளவு மன அழுத்தத்திற்கு நான் ஆளானேன் பின்பு சாப்பிட கொடுத்தனர் இட்லியை சாப்பிட முயன்ற போது பூமிநாதன் என்ற காவலர் Boots காலால் முகத்தில் ஓங்கி மிதித்தார் அதனால் என் இடது கண் அருகில் கிழிந்து ரத்த போக்கு ஏற்பட்டது. ஆனாலும் மீண்டும் மீண்டும் அதே இடத்தில் மிதித்தார் நான் " I have not done anything sir.... “ என்று ஆங்கிலத்தில் பேசினேன் அதற்கு அந்த பூமிநாதன் " இங்க்லீஸ்லதான் பேசுவியா தமிழ் உனக்கு வராதா ? துலுக்கத் தேவிடியா பையன் தானடா நீ " என மதரீதியாக என் மதத்தை புண்படுத்தினர் அதன் பிறகு Bathroom க்கு இழுத்துச் சென்று இரத்தத்தை எனது Shirt ஐ கழட்டி துடைக்கச் சொன்னார் , Shirt ஐ அலசச் சொன்னார் நான் மறுத்ததற்கு நீயே அலசுறியா இல்ல வேறமாறி அலச வைக்கவா " எனச் சொல்லி அவரது Pant ZIP - ஐ கழட்டி சிறு நீர் கழிக்க முற்பட்டார் பின்பு அருகில் இருந்த சாக்கடை நாற்ற மடித்த நீரை என் மேல் ஊற்றினார் நான் அப்போது வலியில் மயங்கி விழும் நிலையில் இருந்தேன் பின் " அந்தோனி " என்ற காவலர் என் மச்சம் காட்ட சொல்லி என்னை நிர்வாணப் படுத்தி " இப்ப தெரியதா யார் பெரியாள்னு " என்று கேளி செய்து சிரித்தார் அப்போது இராமலிங்கம் என்ற காவலர் எனது Mobile Phone ல் இருந்து எனது சகோதரிகளின் புகைப்படத்தை தகாத முறையில் Zoom செய்து பார்த்துக் கொண்டிருந்தார் இப்படி சட்டவிரோதமாக காவல் நிலையத்தில் ( P6 ) அடைத்து வைத்து கொலை வெறியோடு ஆபாசமாக திட்டி எனது மதத்தை இழிவு படுத்தி மிகப்பெரும் மனித உரிமை மீறலில் ஈடுபட்டு ஆய்வாளர் நசீமா உட்பட அணைத்து குற்றமிழைத்த காவலர்கள் மீதும் உரிய சட்ட பிரிவுகளின் கீழ் FIR பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் மேலும் இனி வரும் காலங்களில் காவலர்களால் எந்தவித பிரச்சனையும் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன் சம்பவம் நிகழ்ந்த அன்று சித்ரவதையினால் பதட்டத்துடன் இருந்த காரணத்தினால் அனைத்தையும் காவலர்களிடம் முழுமையாக எழுதித்தர இயலவில்லை இப்படிக்கு ( sdxxxxxx) Abdhul Rahim. அய்யா மேற்படி புகாரை இன்று 20/01/2022 ஆம் தேதி இரவு 19.00 மணியளவில் பெற்று ப்பி6 கொடுங்கையூர் காவல் நிலைய குற்ற எண் 143/2022 u/s 294(b), 323, 324 IPC யில் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்து கொண்டு உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டது .

BACK

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in item No.2, registered case and took up the investigation.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

FIR read over to the Complainant/Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| 14. Signature / Thumb Impression of the Complainant/Informant | | Signature of the Officer in-charge, Police Station | | |
| குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு | | காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் | | |
| 15. Date & Time of despatch to the court: | **20-01-2022** | Name: | **R RAJAN** | |
| நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் | | பெயர் | | |
| | | Rank: | **INSPECTOR OF POLICE** | No. |
| | | நிலை | | எண் |

BACK

BACK

Designed and Development : **NIC (https://www.nic.in/),Chennai (http://www.tn.nic.in/)**

Content is owned and maintained by **TamilNadu Police**

**Last Updated : 21-Jan-2022**

Best viewed in Firefox (v 50.0 & Above), Google Chrome (v 37.0 & Above) [Resolution 1280 X 600 & Above] and Firefox for Android